DATE: 19.12.2023. P.W. 2, Siva Babu, S/o. Veera Badiran

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் எனது முதன்மை சாட்சியத்தை கூறிவிட்டேன். நான் எனது முதல் விசாரணையில் குறியீடு செய்த ம.சா.ஆ.11 ஆவணத்தின் ரூபாய். ஐந்து இலட்சமோ அதற்கு மேலோ பரிவர்த்தனை செய்ததற்கான பதிவு உள்ளதா என்றால் இல்லை. அதிக பட்சம் ரூபாய். ஐந்தாயிரத்தில் இருந்து ரூபாய். பத்தாயிரம் வரை நடந்துள்ளது. இவ்வழக்கின் புகார்தாரர் எத்தனை ஆண்டுகள் எங்கள் வங்கி வாடிக்கையாளராக இருந்து வருகிறார் என்றால் ஐந்து வருடங்களுக்கு மேலாக இருக்கிறார். அவர் கணக்கு தொடங்கிய நாட்களில் இருந்து அந்த கணக்கின் மூலம் செய்யப்பட்ட பணப்பரிவர்த்தனைகள் என்ன என்பது தெரியுமா என்றால் ஆவணங்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். நான் எப்போதிலிருந்து மேற்படி வங்கி கிளையில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 02.05.2023. வங்கி பதிவுகளில் இருந்து ம.சா.1 வங்கிக் கணக்கு தொடங்கிய நாளிலிருந்து செய்யப்பட்ட பணப்பரிவர்த்தனைகள் தெரிய வரும் என்றால் சரிதான். அதிகபட்ச தொகை கணக்கிற்கு வரவு வரும்போது அது தொடர்பாக கணக்கு வைத்திருக்கும் நபருக்கு வங்கியில் இருந்து கொடுக்கப்படும் என்றால் சரிதான். ம.சா.1 சொல்வது போல் ரூபாய் பத்து இலட்சம் காசோலையை அவர் எங்கள் வங்கியில் செலுத்தியிருந்தால் எங்கள் வங்கியிலிருந்து எதிரிக்கு தகவல் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. செலுத்தப்பட்ட காசோலையை முறையாக சோதிக்காமல் நாங்கள் மதிப்பு மறுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி வழங்கியதாக சொல்லப்படும் காசோலையில் பின்புறம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ம.சா.1 ரூபாய் பத்து இலட்சம் கடன் கொடுக்க பண வசதி இல்லை என்பது நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் இருந்து தெரியவருகிறது என்றால் சரியல்ல. அழைப்பாணையில் 01.02.2022 முதல் வங்கி பரிவர்த்தனை கோரப்பட்டதால் நான் அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். மேற்படி தேதிக்கு முன்பாக உள்ள பரிவர்த்தனை விபரங்களைப் பார்த்தால் ம.சா.1 இவ்வளவு பெரிய தொகையை கடனாக கொடுக்க வசதி

....2..

J JAYGANESH Digitally signed by J JAYGANESH

அற்றவர் என்பது தெரியவரும் என்றால் ஆவணத்தின் மூலமாகவே இதற்கு பதில் அளிக்க முடியும். பொதுவாக ஏழு இலட்சத்திற்கு மேல் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் வருமான வரி செலுத்த வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு ம.சா.1 சொல்வது போல் பணம் கொடுக்கவில்லை என்றாலும் காசோலையானது வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

ம.வி. இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.